# பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் - கழகத்தினர் மரியாதை!






அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் , கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி தலைமையில், மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் திருக்கோவிலூர் ஐந்து முனை சந்திப்பில் இருந்து பேரணியாக சென்று கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.உடன் மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் , தலைமை செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், அ.சா.ஏ.பிரபு, எஸ்.லூயிஸ், கை.ரா.சடகோபன், கு.தீனதயாளன், பேரூராட்சி செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன் உள்ளிட்ட நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என கழகத் தோழர்கள் கலந்துகொண்டார்கள்.



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமது சகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் ஒன்றிய, நகர,பகுதி பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை வரை பேரணியாக சென்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார். ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வ நாதன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ. சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, முன்னாள் அமைச்சர் நிலோப்பர் கபில் மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக, வார்டு கழக நிர்வாகிகள், கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.





பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகம் சார்பில் செஞ்சி சாலையில் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் டாக்டர் இரா.மாசிலாமணி, மருத்துவர் ப.சேகர், வழக்கறிஞர் கோ.அசோகன், சீனி.சின்னசாமி எம்.சி, ந.ப.மனோகரன் எம்.சி, வி.எஸ்.முருகன், சின்னா கே.ராஜேந்திரன், ரயில்வே கோட்டர்ஸ் சங்கர், சாதிக் பாட்சா, தொ.மு.ச. முருகானந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராசேந்திரன் செய்திருந்தார்.





இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஒன்றியம் வி. சி. மோட்டூர், வாலாஜாப்பேட்டை நகரம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள அண்ணா, பெரியார், முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைகளுக்கு இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர். காந்தி கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு, அன்னதானம் வழங்கினார். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர பேரூர் செயலாளர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் நகர பேரூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, அவரது திருவச் சிலைக்கு முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், குட்டி புகழேந்தி, ந.சீனுவாசன், சு.விஜி (எ) விஜயராஜ், சி.சண்முகம், பா.ஷெரீப், அ.கோவிந்தன், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சித்தூர் பேருந்துநிலையத்தில் அண்ணா சிலையின்கீழ் மலர்களால் அமைக்கப்பட்டிருந்த பேறிஞர்அண்ணா படத்திற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தெற்கு பகுதி செயலாளர் – மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார், கழக புரவலர் துரைசிங்காரம்,வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வீ. தயாநிதி, மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா,வட்ட செயலாளர், மாமன்ற உறுப்பினர் ஆர். கே. அன்பு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பண்ருட்டி நகரக் கழகம் சார்பில், பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு கும்பகோணம் சாலையில் உள்ள கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு, நான்கு முனை சந்திப்பில், நிறுவப்பட்டுள்ள அண்ணா அவர்களின் சிலைக்கு, நகரமன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வன்,ஆனந்தி சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.